## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை - 2015

---

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (என்டபிள்யூஎஸ்டிபீ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (என்டபிள்யூஎஸ்டிபீ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம் (எல்கேஏஎஸ்)**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்** – நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படி மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்குமாயின், உடமையான சொத்துக்களான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முழு வகுதியும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 167.90 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் வேண்டப்பட்டவாறு மீள்மதிப்பீடு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் போது கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

மேலும், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை பிராந்தியங்களால் பயன்படுத்தப்பட்ட 405 மற்றும் 461 நிலையான சொத்து விடயங்கள் மதிப்பிடப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி குறைததுக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) **எல்கேஏஎஸ் 20 – அரசாங்க மானியங்களிற்கான கணக்கீடும் அரசாங்க உதவிகளின் வெளிப்படுத்துகையும் -**

(i) சமுதாய அடிப்படையிலான கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் ரூபா 135.75 மில்லியன் தொகையாக இருந்தன. எவ்வாறாயினும், நடைபெறும் வேலைகளில் உள்ளடக்கப்பட்ட தொடர்புபட்ட கிரயம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) 10 ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்த 28 செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 9,517.27 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டு மானிய மீதிகள் தீர்க்கப்படாமல் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்காமையால் தீர்க்கப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(iii) வெளிநாட்டு மானியங்களாக கணக்கிடப்பட்ட ரூபா 2,465.18 மில்லியன் கூட்டுத்தொகையான குறித்த செயற்திட்டங்கள் தொடர்பான ஒதுக்கீடு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) **எல்கேஏஎஸ் 37- ஏற்பாடுகள்**

(i) 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 100.11 மில்லியன் இடைக்கால கொடுப்பனவு நிதிக்கூற்றுக்களில் நிதியேற்பாடுகள் செய்யப்படாமல் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரருக்கு 2016 இல் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரால் வட்டிக் கோரிக்கை தொடரபில் சட்டச் செயற்பாடுகள் தொடரப்படுகின்ற போதிலும், இது நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) குழாய் வரிசைகளை இடுகின்ற போது மூன்றாம் தரப்பினரின் சொத்துக்களிற்கு விளைந்த சேதங்களிற்காக ரூபா 5 மில்லியன் இழப்பீடு கோரி கேகாலை மாவட்ட நீதி மன்றத்தில் சபைக்கு எதிராக சட்டச் செயற்பாடுகள் தொடரப்பட்டிருந்தது. இது தொடர்பான வெளிப்படுத்துகைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **எல்கேஏஎஸ் 38- கற்பனைச் சொத்துக்கள்**

(i) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மானியமாக பெறப்பட்டு சபையால் பயன்படுத்தப்பட்ட இந்தியன் மென்பொருள் மீளாய்வாணடின் இறுதியில் உள்ளவாறு பூச்சிய பெறுமதியாக இருந்தது. எவ்வாறாயினும், பேரேட்டின் பிரகாரம் மானியக் கணக்கில் ரூபா 20.74 மில்லியன் மீதி தீர்க்கப்படாமல் இருந்தது.

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகள் தொடர்பில் ரூபா 31.9 மில்லியன் காலக்கழிவு மீளாய்வாண்டிற்கான விரிவான வருமானக் கூற்றில் தவறுதலாக உள்ளடக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(உ) **எல்கேஏஎஸ் 39- அங்கீகரித்த நிதிக் கருவிகள் மற்றும் அளவீடு**

மீளாய்வாண்டின் போது நன்கொடையாளர் நிதியளிக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்களின் உள்ளுர் நிதித் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு திறைசேரி முறியாக பெறப்பட்ட ரூபா 7,643.55 மில்லியன் மீதி நிதிக்கூற்றுக்களில் விற்பனைகளிற்காக கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த மீதியின் நியாய பெறுமதி மீதான இலாபம் அல்லது நட்டம் மீளாய்வாண்டிற்கான ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடக்கு அவசர மீட்டெடுப்பு செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,298.46 மில்லியன் பெறுமதியான செயற்திட்டத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமல் நடைபெறும் வேலையில் இருந்தது. மேலும், யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்த ரூபா 258.84 மில்லியன், ரூபா 4.88 மில்லியன் மற்றும் ரூபா 23.50 மில்லியன் பெறுமதியான முறையே கட்டிடங்கள், ஆய்வு கூட

உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் என்பன மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 929.82 மில்லியன், ரூபா 17.45 மில்லியன் மற்றும் ரூபா 440,694 ஆன அசாதாரண செலவு மீதிகள் முறையே கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கு, புதிய சேகரிப்பு கடன்பட்டோர் கணக்கு மற்றும் வியாபார கடன்பட்டோர் கணக்கு என்வற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் அதனால் அந்த கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய மீதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 947.71 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது அவுஸ்திரேலிய தரமுயர்த்தல் கழிவகற்றல் செயற்திட்டம் மற்றும் கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட முறையே ரூபா 111.59 மில்லியன் மற்றும் ரூபா 27.23 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியம் இரண்டு தடவை மானிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், அந்த மானிய மற்றும் நடைபெறும் வேலைக் கணக்குகள் ரூபா 138.82 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 363 மில்லியன் கிரயத்தில் ஸ்பானிஸ் சுனாமி வசதிகள் நிதியத்தை பயன்படுத்தி மொறட்டுவ, பாணந்துறை மற்றும் நீர்கொழும்பிற்காக குடி தண்ணீர் சுத்திகரிப்பு வசதிகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணச் செயற்திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கடல் நீர் சுத்திகரிப்பு பொறி 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆறு ஆண்டுகள் கடந்த பின்னரும் மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் அதனால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (பிபிஈ) பெறுமதி அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. பொறியானது நீர் உள்ளிழுத்தலிலுள்ள பிரச்சனைகள் காரணமாக 2010 யூலையில் இருந்து செயற்பாட்டில் இருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்ட இருப்பு மீதி ரூபா 6,137.05 மில்லியனாக இருந்த போதிலும் அந்திகதியில் உள்ளவாறு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதி ரூபா 6,124.06 மில்லியனாக இருந்தது. எனவே, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இருப்பு மீதி ரூபா 12.99 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய தரப்பினருக்கு பூர்த்தியாக்கப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 110.95 மில்லியன் பெறுமதியான வெளிச் செயற்திட்டம் தெளிவுபடுத்தப்படாமல் நடைபெறும் வேலையின் கீழ் இருந்தது.

(எ) 34 செயற்தட்டங்கள் தொடர்பில் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்ட ரூபா 1,090.55 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கங்கள் செய்யும் நோக்கில் புலனாய்வு செய்யப்படாமல் மூன்று முதல் பத்து ஆண்டுகள் வரையான காலவீச்சில் மாற்றமடையாது இருந்தன.

(ஏ) ஆசிய அபிவிருத்தி வங்கி கழிவுநீர் செயற்திட்டம் மற்றும் கதிர்காமம் புனித பிரதேசத்திற்கான கழிவுநீர் உட்கட்டமைப்புக்களை தரமுயர்த்தல் செயற்திட்டம் என்பன தொடர்பில் ஆண்டின் போதான நிதிக்கூற்றுக்களில் இரண்டு தடவை தொகைகளை பதிந்தமை காரணமாக முறையே ரூபா 36.67 மில்லியன் மற்றும் ரூபா 148.79 மில்லியனால் நடைபெறும் வேலை மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) ஆறு செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 90.98 மில்லியன் மொத்தமான நடைபெறும் வேலை மீதிகள் தெளிவாக்கப்படாமல் சம்பந்தப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் இருந்தன.

(ஒ) ரூபா 4,287.15 மில்லியன் தொகையான 97 பூர்த்தியாக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்களின் கிரயம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கப்படாமல் நடைபெறும் வேலையில் இருந்தது.

(ஓ) 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா 81.92 மிலலியன் கூட்டுத்தொகையான இரண்டு செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட கடன்கள் மீது செலுத்தவேண்டிய வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த வட்டிகளைக் கவனத்திற்கொள்ளாததின் விளைவால் ரூபா 81.92 மில்லியனால் சபையின் அரசாங்க உரிமை மூலதனம் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஔ) 2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்ட மொறட்டுவ, இரத்மலான, ஜா-எல /எக்கல செயற்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 33.08 மில்லியன் பெறுமதியான ஏழு வாகனங்கள் முன்னைய ஆண்டுகளிற்கு சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 6.42 மில்லியன் தொகையான அவற்றின் மீதான பெறுமானத்தேய்வு முன்னைய ஆண்டு சீராக்கல்களாக கணக்கிடப்பட்டிருந்தது. இதன் விளைவால், ஆண்டிற்கான நிலையான சொத்துக்களிற்கான சேர்ப்பனவுகள் அதே தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(க) இரண்டு தடவை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்த 2012 இலிருந்து சபையால் பயன்படுத்தப்பட்ட மூன்று லொறிகள் மற்றும் ஒரு டபிள் கப் மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றின் மீதான பெறுமானத்தேய்வுகள் ரூபா 1.16 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கலாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(கா) ரூபா 43.97 மில்லியன் மொத்தமான சொத்துக்களின் பெறுமதி நிலையான சொத்து பதிவேட்டில் அவற்றினை தனித்தனியாக இனங்காணப்படாமல் ஆண்டுக்கு ஆண்டு முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(கி) ரூபா 2 மில்லியன் பெறுமதியான பவுசர் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிராந்தியங்களால் முறையே ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 1.77 மில்லியன் ஆக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வாகனங்களின் பெறுமதி ரூபா 1.77 மில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(கீ) மூன்று மோட்டார் வாகனங்களின் பெறுமதி புத்தக பெறுமதியிலும் அதேபோல் மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதியிலும் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் விளைவால், மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 6.2 மில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(கு) மூன்று செயற்திட்டங்களிற்காக மானியமாக பெறப்பட்ட ரூபா 8,119.58 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய மானியம் காலக்கழிவிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், இலாபம் ரூபா 34.58 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கூ) தலைமை அலுவலகத்தில் மதில் சுவர் நிர்மாணிப்பதற்காக ஏற்பட்ட ரூபா 6.87 மில்லியன் தொகையான கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் அதனால் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிலையான சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

''மதில் சுவரின் நிர்மாணம் தொடர்பில் நீதி மன்றத்தில் சட்ட வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன'' என சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(கெ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ஆறு வாகனங்கள் பொறுமதியிடப்பட்டுக் கொண்டுவரப்பட்டிருக்காமை காரணமாக குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(கே) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 6.09 மில்லியன் வரவு மீதியை தீர்ப்பனவு செய்த பின்னர் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) ரூபா 227.33 மில்லியனாக இருந்தது. இதன் விளைவால் செலுத்த வேண்டிய வற் ரூபா 6.09 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கை) நிதிக்கூற்றுக்களில் பழுதடைந்த இருப்புக்களிற்காக ரூபா 4.32 மில்லியனிற்கு மேல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கொ) மீளாய்வாண்டிற்கான உள்நாட்டு வங்கி கடன்களின் வட்டி ரூபா 441.23 மில்லியனாக இருந்தது. அதில், ரூபா 137.72 மில்லியன் மற்றும் ரூபா 303.51 மில்லியன் முறையே மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், நடைபெறும் வேலை மற்றும் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 303.51 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கோ) பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட முறிக்கான ரூபா 2.19 மில்லியன் கூட்டுமொத்தமான முதலீடுகள் மீதான வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(கௌ) வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், வவுனியா மற்றும் யாழ்ப்பாணப் பிராந்தியங்களில் 60 மீள்சுழற்சி திட்டங்கள் தொடர்பில் செலவினங்களுக்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்படாமல் ரூபா 40.46 மில்லியன் கூட்டுமொத்தமான பெறப்பட்ட முற்பணங்கள் இருந்தன.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

கணக்காய்வில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வியாபாரக் கடன்பட்டோருக்கும் சபையின் வர்த்தக பிரிவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வியாபார கடன்பட்டோரின் காலப்பகுப்பாய்விற்கும் இடையில் ரூபா 168.51 மில்லியன் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் சேகரிப்பிற்கும் பிராந்திய உரிய ஆதார நிலையங்களால் சமர்ப்பிக்கப்பட்ட நேரொத்த பட்டோலைகளிற்கும் இடையில் ரூபா 2.81 மில்லியன் கூட்டுத்தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) சபையின் வர்த்தக பிரிவால் பேணப்படுகின்ற தண்ணீர் விற்பனைகளிலிருந்தான வருமானம் தொடர்பான தகவல்களின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களிற்கும் மீற்றர் விற்பனைகள், மொத்த வழங்கல் மற்றும் பவுசர் வழங்கல் என்பன தொடர்பில் முறையே உரிய பிரிவுகளால் பேணப்பட்ட பதிவேடுகளிலுள்ள தொகைகளிற்கும் இடையில் ரூபா 368 மில்லியனான குறிப்பிடத்தக்களவு வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) விசேட செயற்திட்டங்களின் இரண்டு முற்பணக் கணக்குகள் தொடர்பில் பேரேட்டு மீதிகளிற்கும் பட்டோலை மீதிகளிற்கும் இடையில் ரூபா 1.54 மில்லியன் கூட்டுத்மொத்தமான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) இரண்டு நடைமுறைக் கணக்குகளின் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட வங்கி மீதிகளிற்கும் காசுப் புத்தகங்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 1.2 மில்லியன் மற்றும் ரூபா 934,349 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஊ) சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட முறிகள் மீது மேற்கொள்ளப்பட்ட கட்டுநிதிக்கும் எட்டு செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்கும் இடையில் ரூபா 212.52 மில்லியன் கூட்டுமொத்தமான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(எ) பட்டோலைகள் மற்றும் பேரேடுகளில் காட்டப்பட்ட வவுனியா பிராந்தியத்தில் அமுலாக்கப்படுகின்ற 2கேஆர் செயற்திட்டம் தொடர்பான நடைபெறும் வேலைகளிற்கு இடையில் ரூபா 13.06 மில்லியனான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஏ) கணனி முறைமையில் அலகு விலை தவறாக குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக புத்தக மீதிக்கும் காகிதாதிகளின் இருப்பு மீதி முறைமைக்கும் இடையில் ரூபா 7.08 மில்லியன் வித்த்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஐ) குழாய் உபகரண உப பாகங்கள், நட்டுக்கள், போல்ட் மற்றும் லோட் (bold and loud) என்பவற்றின் பௌதீக மெய்மையாய்வு மீதிக்கும் கணனி முறைமை மீதிக்கும் இடையிலான வித்தியாசமொன்றின் காரணமாக ரூபா 1.40 மில்லியன் பெறுமதியான இருப்புக் குறைவும் ரூபா 442,870 மில்லியன் பெறுமதியான மிகைகளும் அவதானிக்கப்பட்டன.

(ஒ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட கடன் ரூபா 15,288.48 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம், இது ரூபா 15,180.44 மில்லியனாக இருந்தது. எனவே, ரூபா 108.04 மில்லியனான விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஓ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வரையறுத்த ஓய்வுபெறல் கடப்பாடுகள் மீதான உள்ளபடியான நட்டத்திற்கும் வெளித்தரப்பினரால் தயாரிக்கப்பட்ட மதிப்பாய்வு அறிக்கைக்கும் இடையில் ரூபா 216.73 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. உள்ளபடியான மதிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம், நிர்ணயிக்கப்பட்ட நலன் பொறுப்பு மீதான சேவைக் கிரயம் மற்றும் தேறிய வட்டி என்பவற்றிற்கான செலவினம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 622.19 மில்லியன் தொகையாக இருந்த போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அவை ரூபா 391.42 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. எனவே, ரூபா 230.77 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஔ) காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கும் பணிக்கொடை பதிவேட்டில் காட்டப்பட்ட மொத்த கொடுப்பனவுகளுக்கும் இடையில் ரூபா 1.19 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது.

(க) பிவீசீ குழாய் இருப்புக்கள் தொடர்பில் முறைமை மீதிகளிற்கும் நிதிக்கூற்றுக்களிலுள்ள பெறுமதிகளிற்கும் இடையில் ரூபா 543,556 கூட்டுத்தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதிக்கும் பதின்னான்கு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நோரொத்த

மீதிகளிற்கும் இடையில் அவதானிக்கப்பட்ட ரூபா 3,547.35 மில்லியன் தேறிய வித்தியாசம் இருந்த போதிலும் இது இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 இனங்காணப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வவுனியா பிராந்தியத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 108.51 மில்லியன் இனங்காணப்படாத மானிய மீதிகள் இருந்தன. அதில், நான்கு ஆண்டுகளிற்கு மேலாக இனங்காணப்படாமல் கணக்குகளில் ரூபா 142.23 மில்லியன் இருந்தது. இதற்கு மேலதிகமாக, அவற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 149.16 மில்லியன் தொகையை வழங்கிய நாட்டினை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) ரூபா 2.42 மில்லியன் இருப்பு சீராக்கல் கணக்கு மீதி தெளிவுபடுத்தப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக களணிய பிராந்தியத்தில் இருந்தது.

(இ) இரண்டு பிராந்தியங்களிலுள்ள புதிய இணைப்புக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 5.66 மில்லியன் கூட்டுமொத்தமான அசாதாரண செலவு மீதிகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ரூபா 5.78 மில்லியன் மற்றும் ரூபா 1.74 மில்லியன் கூட்டுமொத்தமான இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதிகள் ஏழு பிராந்தியங்களில் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் இனங்காணப்படாமல் இருந்தன.

(ஈ) நிதி நிலமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட முறையே ரூபா 236.23 மில்லியன் மற்றும் ரூபா 154.33 மில்லியன் இனங்காணப்படாது நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற வரவு மற்றும் செலவு மீதிகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, செயலற்றவையாக ஏற்கனவே வகைப்படுத்தப்பட்ட பல மீதிகள் உள்ளதுடன் அதேபோல் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 35.39 மில்லியன் கூட்டுத்தொகையான வேறு இனங்காணப்படாத மீதிகளும் இருந்தன.

(உ) சபையானது நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம், பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின்னர் ரூபா 230 மில்லியன் கூட்டுத்தொகையான இனங்காணப்படாத செலவு மற்றும் வரவு மீதிகளை பதிவழித்திருந்தது.

(ஊ) புதிய இணைப்பு கட்டுப்பாட்டுக் கணக்கு ஆண்டின் இறுதியில் பூச்சியமாக இருக்க வேண்டிய போதிலும், மூன்று பிராந்தியங்களின் கணக்குகளில் ரூபா 1.15 மில்லியன் வரவு மீதியும் ரூபா 31.91 மில்லியன் செலவு மீதியும் இருந்தது. மேலும், திருகோணமலை பிராந்தியத்தில் மூன்று ஆண்டுகள் மற்றும் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக முறையே ரூபா 5.11 மில்லியன் மற்றும் ரூபா 2.19 மில்லியன் தொகை இருந்தது.

(எ) உள்ளக காசு மாற்றல் கட்டுப்பாட்டு கணக்குகள் ஆண்டின் இறுதியில் பூச்சியமாக இருக்க வேண்டிய போதிலும், அந்த கணக்குகளில் ரூபா 2,218.04 மில்லியன் கூட்டுமொத்தமான வரவு மீதிகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(ஏ) ஆர்ஈபிஜ இல் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து மீளாய்வாண்டின் போது காலத்திற்கு காலம் ரூபா 87,982.86 மில்லியன் வருமானம் பெறப்பட்டிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதில், காசுப் புத்தகம் மற்றும் உள்ளக காசு மாற்றல் கட்டுப்பாட்டு கணக்கு என்பவற்றில் முறையே ரூபா 79,119.56 மில்லியன் மற்றும் ரூபா 9,207.51 மில்லியன் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆகவே, உள்ளக காசு மாற்றல் கட்டுப்பாட்டு கணக்கிற்கு மிகையாக ரூபா 344.21 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தது.

(ஐ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்ணயித்த நலன் கட்டுப்பாட்டின் தேறிய தற்போதைய பெறுமதி கணிப்பீட்டிற்காக உள்ளபடியான மதிப்பாய்வு அறிக்கையில் ஆண்டின் போதான கொடுப்பனவுகளாக ரூபா 405.46 மில்லியன் தொகை கவனத்திற்கொள்ளப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், இது ரூபா 391.42 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. ஆகவே, கணக்காய்வில் ரூபா 14.04 மில்லியன் வித்தியாசம் இனங்காணப்பட்டிருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வாரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | |
| (அ) | 2009 முதல் 2011 வரையான காலத்திற்காக 2கேஆர் செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட செலவினம் | - | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் செலவின விபரங்களும் |
| (ஆ) | வடக்கு பிராந்திய ஆதார நிலையத்திற்கான 79 காணிகளின் சுவீகரிப்பு | - | குத்தகை உடன்படிக்கைகளும் உரித்துறுதிகளும் |
| (இ) | வியாபார கடன்பட்டோர், கடன்பட்டோர் சேகரிப்பு கணக்குகள், புதிய இணைப்பு கடன்பட்டோர் | 2,266.33 | 14 பிராந்தியங்கள் தொடர்பான விரிவான பட்டோலைகள் |
| (ஈ) | முற்பணங்களும் வைப்புக்களும் | 336.73 | விரிவான பட்டியல்கள் |
| (உ) | தேறிய தொங்கல் கணக்கு மீதி | 39.89 | விரிவான பட்டியல்கள் |
| (ஊ) | பதிவழிக்கப்பட்ட செயற்பாடற்ற மீதிகள் | 22.25 | வேண்டப்பட்ட தகவல்கள் |

## 2.3. கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபார கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர், கொழும்பு மாநகர சபை கடன்பட்டோர், கடன்பட்டோர் சேகரிப்பு மற்றும் ஏனைய கடன்பட்டோர் ஆகியோரின் ரூபா 1,419.43 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் 3 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தன.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ), மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (பிஆர்டிஏ), கொழும்பு மாநகர சபை மற்றும் நகர சபைகள் என்பவற்றில் சபையால் வைத்திருக்கப்பட்ட ரூபா 14.64 மில்லியன் குறுகிய கால வைப்பு மீதிகள் 2001 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாமல் இருந்தன.

(இ) முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 4.38 மில்லியன் தொகையான முற்பணங்கள் 2016 யூலை இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் சபையால் அவற்றின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 ஆம் ஆண்டு இறுதியில் இருந்த ரூபா

15.23 மில்லியனான மீதி எவ்வித காரணங்களும் இல்லாமல் செயற்பாடற்ற மீதிகளின் வகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) 2000 முதல் 2013 வரையான காலத்தின் போது ஒப்பந்தகாரரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 54.93 மில்லியன் கூட்டுமொத்தமான முற்பணங்கள் மீளாய்வாண்டு வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) விசேட செயற்திட்டங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 5.04 மில்லியன் மொத்தமான முற்பணங்களை மூன்று ஆண்டுகளிற்கு மேலாக உரிய தரப்பினரால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காணி சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2009 முதல் 2013 வரையான காலத்தின் போது ரூபா 178.55 மில்லியன் தொகையான அத்தகைய காணியின் சுவீகரிப்பிற்காக வழங்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் ரூபா 36.82 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) இருந்தது.

(ஏ) வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 378.9 மில்லியன் தொகையான கோரப்படாத உள்ளீட்டு வற் கோரப்படாமல் கணக்குகளில் இருந்தது. மேலும், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5595 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், திருகோணமலை பிராந்தியம் தெடார்பில் ரூபா 1 மில்லியன் தொகையான பெறவேண்டிய வற் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது.

(ஐ) 106 மற்றும் 60 மீள்சுழற்சி திட்டங்களின் சார்பில் முறையே ரூபா 876.78 மில்லியன் மற்றும் ரூபா 415.73 மில்லியன் கூட்டுமொத்தமான பெறப்பட்ட முற்பணங்கள் 3 ஆண்டுகள் மற்றும் 2 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தன.

(ஒ) அம்பாறை பிராந்தியத்தில் மீள்சுழற்சி வேலைகள் தொடர்பில் ரூபா 333,333 ஆன வரவு மீதி மற்றும் ரூபா 6.27 மில்லியன் செலவு மீதி தெளிவுபடுத்தப்படாமல் 1999 இலிருந்து கணக்குகளில் இருந்தது.

(ஓ) யூடிஏ செயற்திட்டம் தொடர்பில் ரூபா 20.71 மில்லியன் ஆன உள்நாட்டு கடன் மீதி 2011 இலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்க்கப்படாமல் இருந்தன.

(ஔ) ரூபா 37.09 மில்லியனான செயற்பாடற்ற மீதிகளிலிருந்து இனங்காணப்பட்ட மீதி 2015 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்படாமல் நீண்டகாலமாக இருந்தது.

## 2.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|---|
| (அ) | 2005 இன் 05 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவு | மூன்று செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 55.9 மில்லியன் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவு | ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களில் பெருமளவு எண்ணிக்கை ஒப்பந்தகாரர்களிற்கு அவற்றினை வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை<br>--------------------------------------------------<br>8.3.9 ஆம் பிரிவு | (i) ஒன்பது மோட்டார் வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அந்த வாகனங்களின் அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக் கொள்கைகளை புதுப்பிப்பதற்காக சபைக்கு ரூபா 421,459 ஏற்பட்டிருந்தது.<br><br>(ii) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு இருபத்து ஒன்பது ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். 25 ஊழியர்களின் சம்பளங்கள் வரிசை அமைச்சால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 மார்ச் 20 ஆந் திகதிய பிஈ/டபிள்யூஎஸ்/என்டபிள்யூஎஸ்டிபீ/ ஜீஈஎன்/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களக் கடிதம் | 2015 இற்காக நன்கொடையாளர் நிதியளிக்கப்பட்ட தண்ணீர் செயற்திட்டங்களின் உள்நாட்டு நிதி தேவைகளை எதிர்கொள்வதற்கு பொது திறைசேரியிடமிருந்து சபைக்கு ரூபா 13.9 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறி பெறப்பட்டது. எவ்வாறாயினும், அவற்றின் மீது உழைக்கப்பட்ட ரூபா 1,001.54 மில்லியன் தொகையான வட்டி வருமானம் சபையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவினங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2.1 ஆம் வழிகாட்டல் | மீளாய்வாண்டின் போது ரூபா 1,754.79 மில்லியன் கிரயத்திலான நீர் வழங்கல் செயற்திட்டங்களை அமுலாக்குவதில் பேட்டிக் கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது கைதவிர்ப்பிற்காக சிபார்சு செய்யப்பட்ட 101 வாகனங்கள் 2016 செப்தெம்பர் 30 வரையிலும் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,425.29 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,083.93 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 341.36 மில்லியன் வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உத்தியோகத்தர் கிரயத்தில்

ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு நிதி விளைவுகளின் இந்த வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------------------

#### 3.2.1 இலாபத்தன்மை

--------------------------

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1.56 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த அதேநேரம் சம்பள முரண்பாடுகள் மற்றும் சம்பளங்களின் அதிகரிப்பு என்பவற்றிலுள்ள சீராக்கல் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்வாகச் செலவினங்கள் 43.21 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதனால் மீளாய்வாண்டின் போது ரூபா 100.46 மில்லியன் செயற்பாட்டு நட்டம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 456.24 சதவீதத்தால் நிதி வருமானம் அதிகரித்ததன் விளைவால் ஆண்டிற்கான இலாபம் சாதகமான நேர்த் தொகையைச் சுட்டிக்காட்டுகின்றது. இந்த சாதகமான தாக்கம் சபையின் செயற்பாட்டு நட்டத்தின் அதிகரிப்பை முகாமை செய்வதற்கு திருப்திகரமானளவு வலுப்படுத்தலை வழங்கியிருந்தது. நிதி விளைவுகளை ஆராய்ந்ததில், சபையானது மீளாய்வாண்டின் போது சபையின் பிரதான நடவடிக்கைகளுக்கப்பால் பொது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட முறியின் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானமாக ரூபா 1,001.54 மில்லியனை உழைத்திருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 776,224 ஆன ஒரு ஊழியருக்கான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டில் 1.08 சதவீதத்தால் குறைவடைந்திருந்த அதேநேரம், 2014 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான தேறிய இலாபம் ரூபா 144,242 ஆனது 2015 ஆம் ஆண்டில் ரூபா 108,872 இற்கு குறைவடைந்திருந்ததுடன் 24 சதவீத குறைவை வெளிப்படுத்தப்படுகின்றது.

(இ) 2014 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 45.89 ஆன வருமானம் 2015 ஆம் ஆண்டில் 1.08 சதவீதத்தால் குவைடைந்திருந்தது.

(ஈ) பிராந்திய வருமானம் மற்றும் செலவின அறிக்கை என்பவற்றினை ஆராய்ந்ததில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 16 பிராந்திய அலுவலகங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 739.63 மில்லியன் மொத்த செயற்பாட்டு நட்டம் நீடித்திருந்தது என வெளிப்பட்டது.

(ii) 9 பிராந்திய அலுவலகங்களின் செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 21.51 மில்லியன் அல்லது 4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iii) ஆறு இலாபத்தன்மையான பிராந்திய அலுவலகங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது நட்டங்கள் ஏற்படுகின்ற பிராந்தியங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(iv) 17 பிராந்திய அலுவலகங்கள் தொடர்பில் பாதிடப்பட்ட செயற்பாட்டு வருமானத்துடன் ஒப்பிடும் போது உள்ளபடியான செயற்பாட்டு வருமானம் ரூபா 2,422.81 மில்லியன் அல்லது 22.7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**3.2.2 குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சில குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **2015** | **2014** |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 37.12 | 39.47 |
| தேறிய இலாப எல்லை | 5.53 | 7.62 |
| நடைமுறை விகிதம் | 3.6 | 1.76 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், மொத்த இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 2.35 சதவீதம் மற்றும் 2.09 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) சபையானது நீண்ட கால முதலீட்டு மூலங்களில் மிகை தொழிற்படு மூலதனத்தை முதலீடு செய்து கொள்ளாமல் அவற்றினை பேணி வந்திருந்ததுடன் அதனால் சபையின் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மிகவும் நலிவான மட்டத்தில் இருந்தது.

**3.2.3 பெறுமதிச் சேர்க்கை**

மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் சபையின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டிற்கு 77.76 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஊழியர் வேதனம், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு மற்றும் சுங்கத் தீர்வை என்பவற்றிலுள்ள குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இந்த சாதகமான நிலைமைக்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

**4.. தொழிற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**(அ) சுத்தமான தண்ணீரின் உற்பத்தியும் விநியோகமும்**

சபையானது 2014 ஆம் ஆண்டில் 9.48 சதவீத அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்ற 575 மில்லியன் கனமீற்றர் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் போது 600 மில்லியன் கனமீற்றர் சுத்தமான தண்ணீரை உற்பத்தி செய்திருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் வழங்கப்பட்ட தண்ணீர் வழங்கல் இணைப்புக்களின் எண்ணிக்கை 121,843 ஆக இருந்தது ஆதலால், முன்னைய ஆண்டுடன் அதனை ஒப்பிடும் போது 1.94 சதவீத வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது. அலகு உற்பத்திக் கிரயம் பின்வருமாறு அதிகரித்திருந்தது.

| **ஆண்டு** | **2015** | **2014** | **2013** | **2012** |
|---|---|---|---|---|
| அலகு கிரயம் (ரூபா) | 46.79 | 43.96 | 44.39 | 41.22 |

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம், மீளாய்வாண்டில் அலகு உற்பத்திக் கிரயம் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 13.51 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இந்த அதிகரிப்பிற்கான பிரதான காரணம் குறிப்பிடத்தக்களவு

பதவியணிக் கிரயம் மற்றும் மின்சக்திக் கிரயம் என்பவற்றின் அதிகரிப்பாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக குறிப்பிடப்பட்ட இலக்கின் பிரகாரம், இது மீளாய்வாண்டின் போது 15,028 இணைப்புக்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 5,979 இணைப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இலக்கின் 60 சதவீதம் அடையப்பட்டிருக்கவில்லை என்பதை இது வெளிப்படுத்தியிருந்தது.

**(இ) வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)**

வருமானமற்ற நீர் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் இனங்காணப்பட்டு தனியாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் இது, சாதாரண கிரயமாக கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளிற்கான வருமானமற்ற நீர் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **விபரம்** | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** |
|---|---|---|---|---|---|
| தண்ணீர் உற்பத்தி (கன மீற்றர்) | 600.14 | 575.00 | 547.0 | 525.6 | 490.0 |
| தண்ணீர் நுகர்வு (கன மீற்றர்) | 436.27 | 410.92 | 381.6 | 368.5 | 344.5 |
| வருமானமற்ற நீர் (கன மீற்றர்) | 163.87 | 137.07 | 165.4 | 157.1 | 145.5 |
| தண்ணீர் உற்பத்தியின் சதவீதமாக வருமானமற்ற நீர் | **27.30** | **28.53** | **30.24** | **29.89** | **24.64** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டில் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட நீரின் அளவில் நீர்க்கசிவு, சட்ட விரோத இணைப்புக்கள், இலவசமாக வழங்கல் மற்றும் நிர்வாக காரணங்கள் போன்றன காரணமாக வருமானமற்ற நீர் 27.30 சதவீதத்தைப் பிரதிதித்துவப்படுத்தியது. 2015 இல் கொழும்பு நகரத்தின் வருமானமற்ற நீர் பகுதி 46.03 சதவீதமாக இருந்தது.

(ii) சபையானது சட்ட விரோத இணைப்புக்களைக் குறைப்பதற்கும், நீர் விநியோக குழாய்களில் தற்காலிக தடங்கலை திருத்தும் முறைமைகளை விரைவுபடுத்துவதற்கும் கடந்த காலங்களில் முக்கியமான நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் வருமானமற்ற நீரின் வீதம் 10.67 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த கொழும்பு நகரத்தின் பிரதான நீர் விநியோக முறைமைகளைப் நவீனப்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டதால் அந்த நோக்கத்திற்கான திட்டங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்துவதற்காக சபையின் கவனம் அவசரமாக கோரப்படுகின்றது. தற்போது இது தொடர்பாக இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும், பிரதான நீர விநியோக முறைமைகளின் போதிய மீள்நிர்மாணம் அதிலிருந்து அடையப்பட்டிருக்கவில்லை.

நீர்க் கசிவுகள் காரணமாக மீளமைக்கப்பட வேண்டிய பிரதான நீர் விநியோக முறைமைகள் இதுவரை விசேடமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. பல்வேறு பிரதான செயற்திட்டங்களின்

அமுலாக்கலிற்கான பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றினுடைய அமுலாக்கல் மிக மெதுவான மட்டத்திலேயே நகர்ந்திருந்தன.

(iv) கொழும்பு நகரைத் தவிர்ந்த பிரதேசங்களில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்காக சபையின் கவனம் போதாமலிருந்ததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளும் சாத்தியமற்றவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) ரூபா 3,100.17 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவினத்துடன் 6 செயற்திட்டங்கள் வருமானமற்ற நீரை குறைப்பதற்கு தொடங்கப்பட்டிருந்த போதிலும் கருத்திற்கொள்ளத்தக்க குறைவு இனங்காணப்பட முடியாதிருந்தது.

**(ஈ) கழிவுநீர் முறைமை**

நகரங்களில் கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்கான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான தேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சேர்ந்ததாக இடம்பெற்ற நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. அத்தகைய வசதிகளை வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிரிவில் போதிய முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. கழிவுநீரகற்றும் வசதிகளின் வழங்கல், ஒரு தேசியக் கொள்கையாக சனத்தொகையின் 7 சதவீதமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதன் எய்தலை பரிசோதிப்பதற்கான தகவல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**(உ) இலக்குகளின் அடைதல்**

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமானமற்ற நீரின் சதவீதத்தை குறைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 12 பிராந்திய ஆதார நிலையங்களில் மூன்று மாத்திரமே அந்த இலக்கினை அடைய முடிந்திருந்தது. கொழும்பு நகரத்தில் 40 சதவீதம் வரை மொத்த வருமானமற்ற நீரை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளபடியான குறைப்பு 46.16 சதவீதமாக இருந்தது.

(ஆ) மொத்த குழாய் நீர் வழங்கல் மேவுகை மற்றும் மொத்த கழிவகற்றல் இணைப்புக்களின் மேவுகை மொத்த சனத்தொகையின் 50 சதவீதம் மற்றும் 2.4 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளபடியான மேவுகை முறையே 45.9 சதவீதம் மற்றும் 2 சதவீதமாக மாத்திரமே இருந்தன.

**4.2. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்தல்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளிற்காக பெரும் எண்ணிக்கையான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இது தொடர்பில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகமான பாரிய மட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டக் காலங்களை

நீடித்தமையின் விளைவாக மேலதிக வேலைகள் மற்றும் விலை அதிகரிப்புக்கள் காரணமாக கிரயங்கள் மிக உயர்வாக ஏற்பட்டிருந்தது.

(ஆ) அத்தகைய செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்காக சீரான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) யாழ்ப்பாணம் மாநகர பகுதிக்கு புதிய நீர்த்தேக்க உயர்தல் நிலையம், சுத்திகரிப்பு பொறிகள், இரணைமடு குள நீர்பாய்ச்சல் நிலையம், நிலத்தடி குழாய் வழங்கலும் பொருத்துதலும், பிரதான சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பரிமாற்றம் என்பவற்றின் நிர்மாணத்திற்காக ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியனை வழங்கும் நோக்கில் இலங்கை அரசாங்கத்திற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவராண்மைக்கும் இடையில் தனியாக கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதில், செயற்திட்டமானது 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 124.64 மில்லியன் தொகை அல்லது 2.3 சதவீதத்தைப் பயன்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளை கைவிட்டமை காரணமாக 2015 ஒக்தோபர் 06 இல் கடன் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், ரூபா 11.90 மில்லியன் இழப்பீடு மற்றும் ரூபா 15.2 மில்லியன் நெறிப்படுத்தல் கட்டணம் என்பன செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, 2012 முதல் 2015 வரை குறைவாக பயன்படுத்தப்பட்ட நிதிகளில் ரூபா 57.80 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கழிவு சேகரித்தல் முறைமைக்கான கட்டிடம், கழிவு சுத்திகரிப்பு பொறி, கடல் கழிவுகளை வெளியேற்றல் மற்றும் பராமரிப்பு உபகரணங்களை வழங்கல் என்பவற்றின் நிர்மாணம் உள்ளடங்கலாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் கழிவகற்றல் மற்றும் சுகாதார முறைமைகளின் முன்னேற்ற நோக்கதிற்காக செயற்திட்டத்தால் ரூபா 3,982 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 35.64 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. கழிவு சுத்திகரிப்பு பொறிகளின் நிர்மாணம் மற்றும் கழிவகற்றல் சுழற்சி என்பவற்றிற்கான வடிவமைப்பு வேலைகள் மற்றும் கேள்விகோரல் நடைமுறை என்பன பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாண வேலைகள் 2016 இல் பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 24.30 மில்லியன் கிரயம் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் 2015 இல் இந்த இணைப்புக்களில் நடாத்தப்பட்ட வீட்டுரிமை மற்றும் நில அளவைகள் என்பவற்றின் ஊடாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் குறித்த நோக்கங்களிற்காக பன்படுத்தப்பட வேண்டியிருக்கவில்லை.

**(ஈ) இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா- எல/ எக்கல கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2008 இல் வழங்கப்பட்ட இரத்மலானை / மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் முறைமை மீதான ஒப்பந்தம் ஒப்பந்தகாரர் வங்கி வங்குரோத்து காரணமாக 2013 இல் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தை தொடருவதற்கு தவறியிருந்தார். செயற்திட்டமானது வெளிநாட்டு வர்த்தக வங்கியொன்றிடமிருந்து செயலாற்றல் பிணைமுறி மற்றும் பிடிகாசு மீதான உத்தரவாதம் என்பவற்றின் மீதான உறுதிப்படுத்தல்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சர்வதேச

நிறுவனமொன்றிடமிருந்து சட்ட அபிப்பிராயத்தைப் பெறுவதற்கு ரூபா 3.55 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஏப்ரல் மாதம் வரை ஒப்பந்தகாரருக்கு எதிராக சட்ட நடைமுறைகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.74 மில்லியன் மேலதிக கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உரிய நிறுவனங்களின் சொத்துக்களிற்கு செய்யப்பட்ட சேதங்களில் ஸ்ரீலங்கா ரெலிகொம் மற்றும் சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) என்பவற்றால் ரூபா 18.39 மில்லியன் தொகை கோரப்பட்டிருந்தது.

(iii) நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்கள் மீது பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களாலும் வீதி பாவனையாளர்களாலும் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் வீதி நிலைகளை மீளமைப்பதற்கு ரூபா 23.75 மில்லியன் தொகையை செயற்திட்டமும் சபையும் செலவிட்டிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது.

(iv) மடிவல இணைப்பு வீடமைப்புத் திட்டத்திற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமையின் நிர்மாணம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஊழியர்களிற்கான சொய்சாபுர விடுதிகளின் நிர்மாணம் மற்றும் பூர்த்தியாக்கலிற்கான வடிவமைப்பு, மற்றும் கட்டிட ஒப்பந்தம் என்பவற்றிற்காக செயற்திட்டத்தால் ரூபா 37.44 மில்லியன் கூட்டுத்தொகையான செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் வாசிரி நிர்மாணத்தின் கொடுப்பனவு செயற்திட்ட நோக்கங்களுடன் தொடர்புபட்டிருக்காதமை இனங்காணப்பட்டது.

**(உ) உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காணிகளின் சுத்திகரிப்பிற்காக கமநல அபிவிருத்தி திணைக்கத்திற்கு ரூபா 3.22 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், திணைக்களத்தின் முன்னாள் உதவி ஆணையாளரால் பணம் தவறாக பயன்படுத்தப்பட்டது. ஆகவே, 2014 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்த வேலைகள் 2016 மார்ச் வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த வேலைகளின் பூர்த்தியாக்கலின் தாமதங்கள் காரணமாக, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நெற்பயிர்ச் செய்கையின் இழப்பு தொடர்பில் விவசாயிகளிற்கான இழப்பீட்டு கொடுப்பனவுகளிற்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளில், ரூபா 9.91 மில்லியன் தொகையான இழப்பீடு மேலதிகமாக செலுத்த வேண்டியிருந்தது.

(ii) பேரு ஆறு மீள்குடியேற்ற பகுதிகளில் சுத்திகரிப்பு மற்றும் வேறு உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ரூபா 13.27 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் முரண் கட்டளையொன்றின் கீழ் ரூபா 2.81 மில்லியன் மேலதிகமான கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புக்களிலிருந்து ஈடுசெய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மீதான கிரயம் கடன் பெறுகைகளிலிருந்து ஏற்பட்டிருந்தது.

(iii) 2013 மே மாதத்தில் ரூபா 598.93 மில்லியன் பெறுமதியில் வழங்கப்பட்ட மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் தண்ணீர் பரிமாற்றம் மற்றும்

விநியோக முறைமை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 66 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், தண்ணீர் பரிமாற்றம் மற்றும் விநியோக முறைமையின் நிர்மாணங்களில் இடப்பட்ட குழாய்களின் குறைபாடுகள் 2014 செப்தெம்பரில் இனங்காணப்பட்டிருந்ததுடன் குறைந்த தரமுடைய குழாய்களை மாற்றுவதற்கு ஒப்பந்தகாரர் அறிவுறுத்தப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2016 மே 31 வரையிலும் குழாய்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஊ) கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட, மற்றும் தம்புள்ள பெரும்பாக ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் (கோரப்படாதவை)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 இல் ஐ.அ.டொலர் 172 மில்லியன் ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயம் ஒப்பந்தம் வழங்கப்பட்ட நேரத்தில் 2014 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 229.5 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. கம்பனி சுயவிபரத்தின் பிரகாரம், ஒப்பந்தகாரர் நீர் வழங்கல் துறை அல்லாத மின்சாரத் துறையில் நிபுணத்துவராகவுள்ளார். நுரைச்சோலை மின் நிலையத்தின் கட்டம் 1 இன் நிர்மாணத்தில் பல்வேறு தகராறுகளில் ஈடுபட்டிருந்தமையால் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் கவனத்திற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென எஸ்ஈஎம்ஏ நிறுவனம் சபைக்கு ஆலோசனை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட அறிவுரைகளை கருத்திற்கொள்ளாமல், ஒப்பந்தமானது சபையால் 2013 மே 15 இல் அதே ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 3 ஆம் வழகாட்டலிற்கு முரணாக ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.7.1(அ) வழிகாட்டல் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் 1.6(இ) மற்றும் 8.1(அ) உட்பிரிவுகள் என்பவற்றின் பிரகாரம் கிடைக்கக்கூடிய நிதிகளை உறுதிப்படுத்த முன்னர் 2015 திசெம்பர் வரை ரூபா 1500 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, ஆரம்ப ஒப்பந்தகாரர் சபைக்கான ஐ.அ.டொலர் 64 மில்லியன் பெறுமதியான வேலைகளை உப ஒப்பந்தத்திற்கு விட்டிருந்தார். மேலும், கடன் உடன்படிக்கை கைச்சாத்திட முன்னர், உப ஒப்பந்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆரம்ப ஒப்பந்தகாரரால் சபைக்கு ரூபா 20.90 மில்லியன் தொகையில் 10 சதவீத முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக ரூபா 96.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் செயற்திட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக நிகழ்ந்த ரத்தபஸ்வெல தண்ணீர் மாசடைதல் மீதான கொடுப்பனவிற்காக ரூபா 77 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக ஏற்பட்டிருந்த செலவினங்கள் தொடர்பில் ரூபா 13.85 மில்லியன் மேந்தலைகள் செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான ரூபா 2.04 மில்லியன் பெறுமதியான குழாய் இருப்புக்கள் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டது.

(iv) தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் (கோரப்படாதவை) நோக்கத்திற்காக நான்கு இழுவை வண்டிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 56.05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வண்டிகளின் விலைப்பட்டியல் பெறுமதி ரூபா 13.32 மில்லயனாக இருந்தது. எனவே, மூல நாடு உள்ளடங்கலாக முறைப்படியான நிர்ணய

குறிப்புரைகள் கிடைக்காமையால் ரூபா 42.73 மில்லியன் மேலதிகக் கிரயம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, செயற்திட்டம் தொடங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரரால் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.24 மில்லியன் பெறுமதியான இயந்திரம், உபகரணங்கள், பம்புகள் மற்றும் உபபாகங்கள் என்பவற்றின் குறைபாட்டுப் பொறுப்புக் காலப்பகுதி, செயற்திட்ட வேலைகள் தொடங்குவதற்கு முன்னர் நீண்ட காலம் எடுத்தமையால் காலாவதியாகி இருந்தது.

**(எ) உள்நாட்டு வங்கி கடன் நீர் வழங்கல் செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) லக்கல புதிய நகர நீர் வழங்கல் செயற்திட்டத்தின் ஒப்பந்தம் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 1.2.1 ஆம் வழிகாட்டலிற்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. புதினப் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம், ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 2,500 மில்லியனாக இருந்தது. இருந்த போதிலும், இது ரூபா 4,495.87 மில்லியனிற்காக அல்லது ஆரம்ப ஒப்பந்த விலையை 80 சதவீதத்தால் அதிகரித்து வழங்கப்பட்டிருந்தது. இந்த அதிகரிப்பிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.9 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் செயலாற்றல் பிணைமுறி கண்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பாய்வுகளிற்கு முன்னர் கேள்வி மதிப்பாய்வுகள் செய்யப்பட்டிருந்தன.

(ii) மடிரிகிரிய நீர் விநியோகம்- கட்டம் II செயற்தட்டத்தின் ஒப்பந்தம் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 3.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் போட்டிக் கேள்வி கோராமல் வழங்கப்பட்டிருந்தது. நோக்கெல்லை மாற்றமில்லாமல் ரூபா 200.03 மில்லியனால் அல்லது 15 சதவீதத்தால் ஒப்பந்தத்தின் ஆரம்ப விலை அதிகரித்திருந்ததுடன் இந்த அதிகரிப்பிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கலகெதர மாவத்தகம நீர் வழங்கல் செயற்திட்டத்தின் ரூபா 700 மில்லியன் தொகையான ஆரம்ப கிரயம் ஒப்பந்தம் வழங்கும் நேரத்தில் ரூபா 3,064 மில்லியன் அல்லது 338 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் இந்த அதிகரிப்பிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 3.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், இந்த ஒப்பந்தத்திற்காக போட்டிக் கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.7.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரரின் நிதி இயலளவு கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) கொழும்பு நகர நீர் வழங்கல் முன்னேற்ற செயற்திட்டம் - கட்டம் 01 இன் பொறியியலாளரின் மதிப்பீடு ரூபா 2,355.55 மில்லியனாக இருந்த போதிலும், 17 சதவீத அதிகரிப்புடன் ரூபா 2,792.06 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 3.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், போட்டிக் கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. தேசிய திட்டமிடல் திணைக்களத்திடமிருந்து திருத்தப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டிற்காக அனுமதி பெறுதல் நியம அமைச்சரவை அங்கீகரித்த கொள்வனவு குழு (எஸ்சீஏபிசீ) சிபார்சு செய்திருந்த போதிலும் அத்தகைய அங்கீகாரம் பெறப்பட்டதா அல்லது இல்லையா போன்ற தகவல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் (ஐபிசீ) விண்ணப்பங்களின் பிரகாரம்,

நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கலிற்கு முன்னர் பத்து விடயங்களிற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 49.31 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், பிடி காசாக ஐபிசீ இடமிருந்து 10 சதவீதம் கழிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளுடன் இணங்காமல் ஐபிசீ5 இடமிருந்து ரூபா 35.20 மில்லியன் மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

**4.3. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ரூபா 2.42 மில்லியன் தொகையான இருப்புச் சீராக்கல் கணக்கில் காட்டப்பட்ட இருப்பு பற்றாக்குறையை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உலர் வலய நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தால் உடன்பட்ட கிலோமீற்றர் எண்ணிக்கை பயன்படுத்தப்படாமை காரணமாக பயன்படுத்தப்பட்ட நான்கு வாகனங்களிற்கான வாடகையாக ரூபா 1.25 மில்லியன் மேலதிக கிரயம் ஏற்பட வேண்டியிருந்தது.

**4.4. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 10.63 மில்லியன் பெறுமதியான நீர் அளவை மாணிகள் மற்றும் பித்தளை பொருட்கள் நீண்ட காலமாக மெதுவாக நகருபவையாக இருப்புக்களில் இருந்தன.

(ஆ) சபைக்கு சுனாமி மானியத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா 20.72 மில்லியன் பெறுமதியான பிஈ உபபாகங்கள், நட்டு மற்றும் போல்ட், லோட் போன்றன நகராதவையாக தலைமை அலுவலகத்தின் சீ களஞ்சியத்தில் இருந்தன.

(இ) ரூபா 4.32 மில்லியன், ரூபா 26.28 மில்லியன் மற்றும் ரூபா 9.71 மில்லியன் பெறுமதியான டிஐ குழாய்கள் முறையே அசையாத, மெதுவாக அசைகின்ற மற்றும் பழுதடைந்த இருப்புக்களாக தலைமை அலுவலகத்தின் சீ களஞ்சியத்தில் இருந்தன.

(ஈ) கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பிரகாரம், ஆறு நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பில் ரூபா 67.50 மில்லியன் கூட்டுமொத்தமான அசையாத இருப்புக்களின் மீதி நீண்ட காலமாக இருந்தது. அந்த நீர் வழங்கல் திட்டங்களின் மொத்த இருப்பு மீதிகளில் 11 முதல் 60 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(உ) ரூபா 397.60 மில்லியன் பெறுமதியான அசையாத இருப்புக்கள் மற்றும் ரூபா 346 மில்லியன் பெறுமதியான மெதுவாக நகரும் இருப்புக்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களில் இருந்ததுடன் சபையின் மொத்த இருப்பு பெறுமதியின் முறையே 6.7 சதவீதம் மற்றும் 6 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 8 சதவீதம் மற்றும் 5 சதவீத அதிகரிப்பாக இருந்தது.

(ஊ) அடம்பன், மன்னார் மற்றும் வவுனியா களஞ்சியங்களில் ரூபா 9.5 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் நீண்டகாலமாக குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தாமல் இருந்தது.

(எ) ரூபா 1.8 மில்லியன் பெறுமதியான மூன்று நீர் வழங்கல் திட்டங்கள் செயற்திட்டங்களின் நோக்கங்களை அடையப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

(ஏ) யாழ்ப்பாணத்தில் கரவெட்டி மற்றும் நாரந்தனையில் அமைந்துள்ள ரூபா 2.67 மில்லியன் பெறுமதியான இரண்டு எதிர் ஊடுருவல் (Reverse Osmosis) (ஆர்ஓ) பொறி கைவிடப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் 1,008,539 கனமீற்றர் தண்ணீர் நுகர்வுக்கான பற்றுச்சீட்டு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.5 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலிப் பகுதி கழிவுநீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியை நிர்மாணிப்பதற்கு சபைால் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. விலை மதிப்பீட்டு திணைக்களம் ரூபா 71.5 மில்லியனாக இந்த காணியை மதிப்பிட்டிருந்ததுடன் ரூபா 21.45 மில்லியனின் 30 சதவீத முற்பணம் காணி உரிமையாளருக்கு 2014 ஏப்பரல் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. காணியில் ஏற்கனவே வசித்திருந்த சில குடும்பங்கள் மற்றும் இருக்கின்ற காணி உரிமையாளர் ஆகியோர் முற்பணம் பெற்ற பின்னர் காணியிலிருந்து மண்ணை அகற்றியிருந்தனர். காணியின் உரிமைத்துவத்தை கருத்திற்கொள்ளாமல் விற்பனையாளருக்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் 2002 இல் கப்புக்கல தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்காக ரூபா 16 மில்லியன் செலவிட்டு காணியொன்றை சுவீகரித்திருந்ததுடன் காணி சுவீகரிப்பின் பின்னர் அவற்றின் மீதான நிர்மாணத்திற்கான புலனாய்வின் போது பெரிய பாறைகள் கண்டுபிடிக்கப்பட்டமை காரணமாக காணியானது குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 1992 இன் 33 ஆம் இலக்க கனியவளம் மற்றும் கனிப்பொருள் அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டங்களின் வெடிக்க வைக்கப்பட்ட பாறைகளின் வருமானம் இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றப்பட வேண்டும். இரண்டு செயற்திட்டங்களால் வெடிக்க வைக்கப்பட்ட ரூபா 79.97 மில்லியன் பெறுமதியான பாறைகள் அரசாங்க வருமானத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 7.3 மில்லியன் தொகையான இடைப்போக்கிலுள்ள இருப்புக்களின் மீதி மற்றும் அவற்றில் ரூபா 5.8 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் புலனாய்வு செய்யப்படாமல் ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் காலப்பகுதிக்கு மேலாக இருந்தன.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ரூபா 140.41 மில்லியன் தொகையான இடைப்போக்கிலுள்ள இறக்குமதி செய்யப்பட்ட இருப்புக்கள் மீதி காட்டப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 29.40 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் புலனாய்வு செய்யப்படாமல் ஒன்று முதல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(ஊ) பெறப்பட்ட இருப்புக்கள் மற்றும் வழங்கப்பட்ட இருப்புக்கள் இருப்பு மெய்மையாய்வு காலத்திற்கு முன்னரான இருப்பு மீதிகளிற்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 806.50 மில்லியன் கூட்டுமொத்தமான தேறிய வரவு மீதிகள் மற்றும் ரூபா 538.95 மில்லியன் கூட்டுமொத்தமான தேறிய செலவு மீதிகள் இருப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்படாமை காரணமாக இருப்பு மெய்மையாய்வு காலத்தின் பின்னர் இருப்பு மீதிகளிற்கு சீராகப்பட்டிருந்தன.

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது மீளாய்வாண்டின் போது முகாமையாளர்கள் / பிரதம பொறியியலாளர், பொறியியலாளர் (சிவில்), நடுத்தர மட்ட தொழில்நுட்ட (எம்எல்-ரீ) எழுதுனர் மற்றும் இணைந்த வகுதியினர், வேறு தொழில்திறன் தரம் மற்றும் அரைத் தொழில்திறன் போன்ற பிரதான செயற்பாட்டு மட்ட பதவிகளில் இருந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது அமைய அடிப்படையில் 508 பல்துறை தொழில்திறன் பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. 2016 ஏப்ரல் 07 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஆட்சேர்ப்புக்களை நிறுத்துவதற்கு நெறிப்படுத்தியிருந்தார். மேற்குறிப்பிட்ட நெறிப்படுத்தல்களிற்கு முரணாக, பணிப்பாளர் சபை சொல்லப்பட்ட பயிற்சியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு 2016 ஏப்ரல் 19 இல் தீர்மானித்திருந்தது.

(இ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ வேசவைகள் திணைக்கள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தை இறுதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 வெளிப்படையான முறையீனங்கள்**

1999 தொடக்கம் 2006 வரையான காலத்தின் போது திருகோணமலை, களனி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் இடம்பெற்ற ரூபா 246.66 மில்லியன் காசு மோசடிகளை 2015 திசெம்பர் 31 வரையிலும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.8 செயற்பாட்டு நலிவுகள்**

2015 ஏப்ரல் 02 ஆந் திகதிய 15/0243/614/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், சபை ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு முன்னர் மேலதிகமான சம்பளக் கிரயங்களை அறவிடுவதற்கு தொழிற்சங்கம் மற்றும் உயர் முகாமையின் ஒத்துழைப்புடன் கிரய சேமிப்பு பிரேரணையொன்றை சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அறிவுறுத்தப்பட்டவாறு, சபையானது 12 செலவின விடயங்கள் உள்ளடங்கலாக கிரய சேமிப்பு பிரேரணையொன்றை தயாரித்திருந்தது. மேலும், வரிசை அமைச்சின் செயலாளருக்கு கிரய சேமிப்பு பிரேரணையின் மாதாந்த முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வரிசை அமைச்சின் செயலாளருக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் சம்பள அதிகரிப்பை அறவிடுவதற்கு மேற்குறித்த 12 விடயங்களின் கீழ் ரூபா 1,483 மில்லியன் கிரயத்தை சேமிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் எய்தல்களை உறுதிப்படுத்துவதற்கான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், உள்ளக கணக்காய்வாளர் மற்றும் ஏழு ஏனைய உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்களின் பதவி மீளாய்வாண்டு வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம், ஏழு அமைப்பு ரீதியான நோக்கங்கள் மற்றும் நான்கு விடயப் பகுதிகள் இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பத்து விடயப் பகுதிகள் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் ஏழு விடயப் பகுதிகள் தொடர்பில் எந்தவொரு ஐயவினாவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளக கணக்காய்வு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2009 யூன் 09 இன் டிஎம்ஏ/2009(i) ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டல் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்பு | அவதானிப்பு |
|---|---|
| (அ) கணக்கீடு | கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் நடைபெறும் வேலை மீதிகளை இணக்கம் செய்வதற்கு தவறியிருந்தது. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) வேறுபட்ட பிராந்தியங்களிலுள்ள ஒரே வகை நிலையான சொத்துக்களின் இரட்டிப்பு |
| | (ii) கற்பனைச் சொத்துக்களின் பெறுமதியை மீளாய்வு செய்து மீளவெளிப்படுத்தாமை |
| | (iii) செயற்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமை |
| | (iv) நீண்ட காலமாக மாற்றமடையாதிருந்த நடைபெறும் வேலை மீதிகள் பற்றி புலனாய்வு செய்வதற்கு தவறியமை |
| (இ) இருப்புக் கட்டுப்பாடு | (i) பேரேட்டு மீதிகளுடன் சேர்த்து பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதிகளை இணக்கம் செய்யாமை |
| | (ii) கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மீதிகளுக்கும் பௌதீகரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதிகளுக்கும் இடையில் வித்தியாசங்கள் நிலவியமை |
| | (iii) இடைப்போக்கிலுள்ள மீதிகளில் நீண்ட நிலுவையாகவிருக்கின்ற இருப்புக்கள் நிலவியமை |
| | (iv) களஞ்சியங்களில் நீண்டகாலம் நகர்வற்ற மற்றும் மெதுவாக நகரும் இருப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | விடயங்கள் |
| (ஈ) | நாட்குறிப்புக்கள் மீதான கட்டுப்பாடு | (i) | பேரேடு மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களில் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களை இலக்கமிடலில் முரண்படல் |
| | | (ii) | சில நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களில் குறிப்புரைகள் பதியப்படாமை |
| (உ) | செயற்திட்ட நிர்வாகம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு | (i) | எதிர்பார்க்கப்பட்ட காலத்தில் செயற்திட்டங்களை பூர்த்தியாக்க தவறியமை மற்றும் தகுந்த காரணங்கள் இல்லாமல் அதிகமான செயற்திட்டங்களின் காலப்பகுதி நீடிக்கப்படுதல் |
| | | (ii) | சாத்திய வள ஆய்வை சரியாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை |
| | | (iii) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலுடன் இணங்காமை |
| | | (iv) | கால நீடிப்பு மற்றும் நிதிப் பயன்பாடுகளிலுள்ள நலிவுகள் காரணமாக கிரயம் உயர்வாக அதிகரிக்கப்பட்டிருந்தமை. |
| (ஊ) | மீள்சுழற்சி திட்டங்களின் கணக்கீடு | | மீள்சுழற்சி திட்டங்களிற்காக பெறப்பட்ட முற்பணம் ஏற்பட்ட சம்பந்தப்பட்ட செலவினங்களை தீர்ப்பனவு செய்யாமல் நீண்ட காலமாக பொறுப்பில் இருந்தது. |
| (எ) | ஆளணி முகாமைத்துவம் | (i) | வேண்டப்பட்ட அதிகாரம் இல்லாமல் வேறு நிறுவனங்களிற்கு மனித வளங்களை விடுவித்தல் |
| | | (ii) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சியும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தமை |